தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்








Vol: 02 | Issue: 235 | 4 Pages | 23.3.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 235 | 4 பக்கங்கள் | 23.3.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

**இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை**
**மயலாகும் மற்றும் பெயர்த்து**

**விளக்கம்:**
தவம் செய்தவற்கு ஒரு பற்றும் இல்லாதிருத்தல் இயல்பாகும், பற்று உடையவராக இருத்தல் மீண்டும் மயங்குவதற்கு வழியாகும்.

# தொகுதி மறுசீரமைப்பு, எண்ணிக்கை சார்ந்த பிரச்னை மட்டுமல்ல மாநிலத்தின் உரிமை சார்ந்த பிரச்சனை: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை

சென்னை, மார்ச்.23

தொகுதி மறுசீரமைப்பு என்பது எம்.பிக்கள் எண்ணிக்கை சார்ந்த பிரச்னை மட்டும் அல்ல; அது மாநிலத்தின் உரிமை சார்ந்த பிரச்னை என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவு பேச்சு: தொகுதி மறுசீரமைப்பு என்பது தான் இப்போது பேசும் பொருளாக உள்ளது. திமுக ஏன் இதனை பேசும் பொருளாக மாற்றியது என்றால் 2026ல் தொகுதி வரையறை கண்டிப்பாக நடந்தே ஆக வேண்டும். அப்போது, மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செய்தால் தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும்.

இதனை உணர்ந்து தான் முதலில் நாம் குரலை எழுப்பியுள்ளோம். இது எம்.பிக்கள் எண்ணிக்கை சார்ந்த பிரச்னை மட்டும் கிடையாது. மாநிலத்தின் உரிமை சார்ந்த பிரச்னை. அதனால் தான் தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து கட்சியினரையும் அழைத்து கூட்டம் நடத்தினோம். அதில், பாஜவினர் தவிர அனைத்து கட்சிகளும் ஓர் அணியில் நின்று நியாயமான தொகுதி மறுசீரமைப்பு வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

அதில், இந்த தொகுதி மறுசீரமைப்பால் பாதிக்கப்படக்கூடிய மற்ற மாநிலங்களையும் ஒருங்கிணைத்து போராட வேண்டும் என்று முடிவெடுத்தோம். அதற்காக ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலங்கானா, ஒடிசா, மேற்குவங்கம் மற்றும் பஞ்சாப் ஆகிய 7 மாநில முதல்வர்களுக்கும், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இருக்கக்கூடிய அந்த மாநிலங்களை சார்ந்த எல்லா கட்சிகளின் தலைமைக்கும் நான் கடிதம் எழுதியிருந்தேன். அந்த கடிதங்களை ஒரு அமைச்சர் மற்றும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கொண்ட குழு அவர்களை சந்தித்து கொடுத்து விளக்கம் அளித்தனர். எல்லா மாநில முதல்வரிடமும் நான் தொலைபேசி வாயிலாக உரையாடினேன்.



இதனை தொடர்ந்து, சிலர் நேரடியாக வருவதாகவும், சிலர் ஏற்கனவே ஒத்துக் கொண்ட நிகழ்ச்சிகள் காரணமாக தங்களின் பிரதிநிதிகளை அனுப்புவதாகவும் கூறியுள்ளனர். அதன்படி, இந்த முதல்கட்ட ஆலோசனை கூட்டம் இன்று (22ம் தேதி) சென்னையில் நடைபெறவுள்ளது. இப்போது எதற்கு இந்த கூட்டத்தை நடத்த வேண்டும் என சிலர் கேட்கின்றனர். தொகுதி மறுசீரமைப்பால் தமிழ்நாடும், நாம் அழைத்துள்ள மாநிலங்களும் பாதிக்கப்பட்டால் கூட்டாட்சிக்கான பொருளே இருக்காது. ஜனநாயகத்திற்கான மதிப்பே இருக்காது. நாடாளுமன்றத்தில் நம்முடைய குரல்கள் நசுக்கப்படும். நமது உரிமைகளை நிலைநாட்ட முடியாது.

இது இந்த மாநிலங்களை அவமதிக்கும் செயலாகும். எனவே, மக்கள் தொகையை கட்டுப்படுத்தி சிறப்பாக செயல்பட்டு நாட்டின் வளர்ச்சிக்கு பங்களித்த மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு தண்டனை கொடுக்கக்கூடாது. அதனால் தான் தமிழ்நாட்டில் இருக்கும் பெரும்பாலான கட்சிகளோடு ஒருங்கிணைந்த சிந்தனைப்படி மற்ற மாநிலங்களை ஒருங்கிணைக்கும் இந்த கூட்டம் நடைபெறவுள்ளது. இந்த கூட்டத்தில் ஒரு முடிவு எடுக்கப்பட்டு, அதனடிப்படையில் அடுத்தக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நமது நியாயமான கோரிக்கை நிச்சயம் வெற்றியடையும். நமது முன்னெடுப்பு இந்தியாவை காக்கும்.

## திருப்பதி கோவிலில் இந்துக்களுக்கு மட்டுமே பணி சந்திரபாபு நாயுடு



ஐதராபாத், மார்ச்.23

திருப்பதி திருமலை கோவிலில் இந்துக்கள் மட்டுமேபணியமர்த்தப்பட வேண்டும் என்றும், தற்போது பிற சமூகங்களைச் சேர்ந்த நபர்கள் அங்கு பணிபுரிந்தால், அவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாமல் அவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவார்கள் என்று ஆந்திரப் பிரதேச முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

தனது பேரனின் பிறந்தநாளை முன்னிட்டு குடும்பத்துடன் திருமலையில் உள்ள வெங்கடேஸ்வர சுவாமி கோவிலுக்குச் சென்ற முதல்மந்திரிசந்திரபாபுநாயுடு,தரிசனத்துக்குப்பிறகுதரிகொண்டாவில் உள்ள வெங்கமாம்பா அன்னதான விடுதியில் ஒரு நாள் பிரசாதம் விநியோகத்துக்காக ரூ. 44 லட்சத்தை நன்கொடையாக வழங்கினார். மேலும், குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்து பக்தர்களுக்கு பிரசாதம் பரிமாறினார்.

இதனையடுத்து அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:


"திருமலை கோவிலில் இந்துக்கள் மட்டுமே பணியமர்த்தப்பட வேண்டும். தற்போது பிற மதங்களைச் சேர்ந்த நபர்கள் அங்கு பணிபுரிந்தால், அவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாமல் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவார்கள். நாட்டின் அனைத்து மாநிலத் தலைநகரங்களிலும்வெங்கடேஸ்வரசுவாமிகோவில்கள்கட்டப்படும். வெளிநாடுகளிலும் வெங்கடேஸ்வர சுவாமியின் கோவில்கள் நிறுவப்பட வேண்டும் என பல பக்தர்கள் விரும்புகிறார்கள்.

ஏழு மலை பகுதிக்கு அருகில் வணிகமயமாக்கல் கூடாது. இந்தப் பகுதியை ஒட்டி மும்தாஜ் ஹோட்டலுக்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டது. 35.32 ஏக்கர் நிலப்பரப்பில் கட்ட திட்டமிடப்பட்ட ஹோட்டலுக்கான ஒப்புதலை ரத்து செய்ய அரசாங்கம் இப்போது முடிவு செய்துள்ளது. ஹோட்டல் நிர்வாகம் சைவ உணவு மட்டுமே வழங்க முன்மொழிந்திருந்தாலும், இந்தப் பகுதியில் எந்தவொரு தனி நபருக்கும்அனுமதிவழங்கப்படாதுஎன்றுஅரசுதெளிவுபடுத்தியுள்ளது.

24 கிளேமோர் கண்ணிவெடிகளால் நான் குறிவைக்கப்பட்டேன். அத்தகைய தாக்குதலில் இருந்து தப்பிப்பது சாத்தியமற்றது. ஆனால், நான் வெங்கடேஸ்வரரின் தெய்வீக அருளால் மட்டுமே உயிர் பிழைத்தேன். இவ்வளவு பெரிய குண்டுவெடிப்பில் இருந்து நான் தப்பித்தேன் என்பது இறைவனின் மகத்தான சக்தியை நிரூபிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஊழலையும், முறைகேடுகளையும் மறைக்கவே மொழி பிரச்சினை அமித்ஷா



புதுடெல்லி, மார்ச்.23

தேசிய கல்விக் கொள்கை தொடர்பாக மத்திய மாநில அரசுகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டு உள்ளது. இந்தி திணிக்கப்படுவதாக தி.மு.க., உள்ளிட்ட கட்சிகள் கூற, பாஜக மறுத்து வருகிறது.

இந்நிலையில் மாநிலங்களவையில் அமித் ஷா பேசியதாவது:

பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட படிப்புகளை தமிழில் படிக்க வழிவகை செய்தது தேசிய ஜனநாயக கூட்டணி அரசுதான். இந்தி எல்லா மொழிகளுக்கும்நண்பன்தான், மொழியைவைத்துஅரசியல்செய்வோரை அம்பலப்படுத்துவோம். நாங்கள் மாநில மொழிகளுக்கு எதிராக இருக்கிறோம் என்று கூறுவதா?

டிசம்பர் மாதத்திற்கு பிறகு முதல்அமைச்சர்கள், அமைச்சர்கள் மற்றும் எம்.பி.,க்களுக்கு அவர்களின் மொழிகளில் கடிதம் எழுதுகிறேன். தங்களின் ஊழலை மறைப்பதற்காக மொழியின் பெயரால் அரசியல் செய்பவர்களுக்கு இதுவே எனது பதில். மொழியின் பெயரால் அரசியல் செய்பவர்களின் திட்டம் ஒருபோதும் நிறைவேறாது. தமிழகத்தில் பாஜக கூட்டணி ஆட்சி அமையும்போது பொறியியல் மற்றும் மருத்துவ படிப்புகளை தமிழில் படிக்க ஏற்பாடு செய்யப்படும் என்றார்.

## மத்திய அரசுக்கு எதிராக கர்நாடக ஐகோர்ட்டில் 'எக்ஸ்' நிறுவனம் வழக்கு

இம்பால், மார்ச்.23

வடகிழக்கு மாநிலமான மணிப்பூர் சுமார் 2 ஆண்டுகளாக கலவரத்தின் பிடியில் சிக்கியுள்ள நிலையில், சுப்ரீம் கோர்ட்டின் நீதிபதிகள் 6 பேர் இன்று (சனிக்கிழமை) அங்கு செல்கின்றனர்.

மணிப்பூர் ஐகோர்ட்டின் 20ம் ஆண்டு விழாவையொட்டி அங்கு செல்லும் நீதிபதிகள் பி.ஆர்.கவாய், சூர்ய காந்த், விக்ரம் நாத், எம்.எம்.சுந்தரேஷ், கே.வி.விஸ்வநாதன் மற்றும் என்.கோடீஸ்வர் சிங் ஆகியோர் வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்கள் தஞ்சமடைந்துள்ள நிவாரண முகாம்களுக்கு செல்ல திட்டமிட்டுள்ளனர். இந்த 6 நீதிபதிகளில் கோடீஸ்வர் சிங் மெய்தி சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். எனவே அவரை குகி மக்கள் அதிகம் வாழும் சுராசந்த்பூர் மாவட்டத்துக்குள் அனுமதிக்க மாட்டேம் எனக்கூறி மாவட்ட வக்கீல்கள் சங்கம் அறிவித்தது.

இந்த நிலையில் மெய்தி சமூகத்தை சேர்ந்த சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிக்கு அனுமதி மறுக்கும் உத்தரவை திரும்பப் பெறக்கோரி சுராசந்த்பூர் மாவட்ட வக்கீல்கள் சங்கத்தை, அனைத்து மணிப்பூர் வக்கீல்கள் சங்கம் (அம்பா) வலியுறுத்தி உள்ளது. மணிப்பூரின் அனைத்து பகுதிகளிலும் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் சுதந்திரமாக ஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டும் என அம்பா வலியுறுத்தி உள்ளது. அதே சமயம் "மெய்தி சமூகத்துக்கு எதிராக, குறிப்பாக நீதிபதிக்கு எதிராக எந்த தவறான எண்ணமும் இல்லை. பதற்றமான சூழல் நிலவுவதால் நீதிபதியின் பாதுகாப்பு கருதியே இந்த முடிவை எடுத்துள்ளோம்" என சுராசந்த்பூர் மாவட்ட வக்கீல்கள் சங்கம் விளக்கமளித்துள்ளது.




தென்காசிமாவட்டம்சங்கரன்கோவில்ஏ.வி.ஆர்.எம்.விகலையரங்கில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டப்பணிகள் சார்பில் நடைபெற்ற கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா மற்றும் ஏழைப் பெண்களுக்கு திருமணநிதியுதவியுடன்8கிராம்தாலிக்குதங்கம்வழங்கும்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழாவினை நடத்தினார்கள்.

## நீர், மோர், குளிர்பான பந்தல்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டு கோளுகிணங்க திராவிட முன்னேற்ற கழக இளைஞர் அணி செயலாளர் தமிழக துணை முதலமைச்சர் "#இளந்தலைவர்" உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி" அவர்களின் ஏற்பாட்டில் மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பாக கடந்த 15 நாட்களுக்கு மேலாக 21.03.2025 அன்று நீர் மோர் குளிர்பான பந்தல் சட்டமன்ற அலுவலக வாசலில் நீர், மோர் பந்தல் அமைக்கப்பட்டு மதுரை மாநகர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் . தமிழ் சந்திரன், சத்யராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு கோடை கால வெயில் தாக்கத்தையும் தாகத்தையும் தீர்த்து வைத்து வைக்கும் வகையில் நீர், மோர், சர்பத், சர்பத், இளநீர் போன்ற குளிர் பானங்களை வழங்கி பொதுமக்களை கௌரவித்தனர்

## சுண்டக்காம்பாளையம் அரசுப் பள்ளியில் ஆண்டு விழா



மார்ச் 21சுண்டக்காம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில்ஆண்டுவிழாமற்றும் இலக்கிய மன்ற விழா, விளையாட்டு விழாபோட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு விழாவானது திருப்பூர் மாவட்டதொடக்கக்கல்வி அலுவலர்மதிப்புமிகு ,

கோ. பழநிஅவர்கள் பரிசு வழங்கிசிறப்பித்தார்.பள்ளி தலைமை ஆசிரியர்சு. காளியப்பன் வரவேற்புரை வழங்கினார் . வட்டார கல்வி அலுவலர் Iதலைமை தாங்கினார் .வட்டாரக்கல்வி அலுவலர்சுப்பிரமணியன்I அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.இவ்விழாவில்ஆனந்த் ,மகாலிங்கம்,ரத்தினவேல் அண்ட் சன்ஸ்,சந்திரமோகன் ,ஈஸ்வரமூர்த்தி ,பிரேமா,ரவிச்சந்திரன், பல்லகவுண்டன்பாளையம் சக்தி பவுண்டரிதலைவர் திருநாவுக்கரசு, மேலாளர் ராஜேந்திரன், ரங்கசாமி, சுப்பிரமணி ,பிரபாகரன், சண்முகராஜ், ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். மேலும் பெற்றோர் ஆசிரியர் கழகதலைவர்பழனிச்சாமி கொத்துக்காரர்செல்வராஜ், நல்லசிவம், மகாலிங்கம்,எஸ்.எம். சிதலைவர் சித்ரா, தமிழ்ச்செல்வி , மற்றும் ஊர் பொதுமக்கள், முன்னாள்மாணவ மாணவிகள்பெருந்திரளாக கலந்து கொண்டனர்.பட்டதாரி ஆசிரியர் ரங்கநாதன்நன்றி கூற நாட்டுப்பண்ணுடன்விழா இனிதே நிறைவு பெற்றது.

## கந்தர்வகோட்டை அருகே சர்வதேச நீர் தினம் கடைபிடிக்கப்பட்டது




புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கட்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சுற்றுச்சூழல் மன்றத்தின் சார்பில் சர்வதேச நீர் தினம் கடைபிடிக்கப்பட்டு நீரின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர் தமிழ்ச்செல்வி தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்ககந்தர்வக்கோட்டை ஒன்றிய செயலாளர் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா பேசும் பொழுது உலக நீர் தினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22ஆம்தேதிநன்னீர்பற்றியவிழிப்புணர்வை ஏற்படுத்தவும், நன்னீர் வளங்களை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதற்கான அழைப்பை ஏற்படுத்தவும் ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டாடப்படும் ஒரு உலகளாவிய தினமாகும் என பேசினார். முன்னதாக மாணவர்கள் நீரின் முக்கியத்துவம் குறித்து தெரிந்து கொண்டனர். நிறைவாக ஆங்கில ஆசிரியர் சிந்தியா ந்தியா நன்றி கூறினார்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டம் புதுவயல் வித்யா கிரீன் கிண்டர் கார்டன் பட்டமளிப்புவிழா&விருதுவழங்கும்விழாவில்பள்ளிதாளாளர்முனைவர்ஆர்சுவாமிநாதன் வரவேற்று பேசினார் சிறப்பு விருந்தினர் மோட்டார் வாகன ஆய்வாளர் விஜயகுமார் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர் சி சாதனா பிரபு டென்டல் பொது பல் மருத்துவமனை கலைவாணி விக்னேஷ் மற்றும் டாக்டர் கே விஜயலட்சுமி பள்ளி குழு தலைவர் கிருஷ்ணன் பொருளாளர் மற்றும் புதுவயல் சேர்மன் ஹாஜி முகமது மீரா ஆற்றல் மிக்க பள்ளி முதல்வர் முதல்வர் ஹேமா மாலினி சுவாமிநாதன் மற்றும் ஆசிரியர் பெற்றோர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்



மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வலையபட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான சிறு புகைப்படக் கண்காட்சி ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்

# திருப்பூரில் ஏற்கனவே பெண் அதிகாரிகள் பலர் கையும் களவுமாக சிக்கிய நிலையில், மீண்டும் ஒரு பெண் அதிகாரி கைது


திருப்பூர், மார்ச்.23

திருப்பூரில் ஏற்கனவே பெண் அதிகாரிகள் பலர் கையும் களவுமாக சிக்கிய நிலையில், மீண்டும் ஒரு பெண் அதிகாரி, கைதாகி உள்ளார்

பொறுப்பு மிக்க துறையில், அதிலும் அரசு பணியில் பதவி வகித்துவரும் நிலையில், இதுபோன்ற பெண்கள்கைதாவதுபொது மக்களுக்கு அதிர்ச்சியை தந்து கொண்டிருக்கிறது. என்ன நடந்தது திருப்பூர் மாவட்டத்தில்? தமிழக வருவாய்த்துறை, பதிவுத்துறைகளில் லஞ்ச சம்பவங்கள் அதிகமாகவே நடந்து வருகின்றன. அரசு அதிகாரிகள்முதல் ஊழியர்கள்வரை கைதாகி வருகிறார்கள். இதற்கு திருப்பூர் மாவட்டமும் விதிவிலக்கல்ல.

4நாட்களுக்குமுன்புகூட, திருப்பூர் மாவட்டத்தில் விஏஓ லஞ்சம் வாங்கி சிக்கியிருந்தார்.. அவிநாசி முருகம்பாளையத்தை சேர்ந்த 42 வயது கார்த்திகேயன், இடையபாளையத்தில் 2.25 ஏக்கர் நிலத்தை இவர் வாங்கியிருக்கிறார்..

அந்த இடத்துக்கான சிட்டாவில் பெயர் சேர்ப்பதற்காக, இடையபாளையத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்தில் உரிய ஆவணங்களோடு கார்த்திகேயன்விண்ணப்பித்திருந்தார். சிட்டாவில் பெயர் சேர்க்கை ஆனால், பட்டா பெறுவதற்காக கிராம நிர்வாக அலுவலர்பிரபு (44) மற்றும் அவரது உதவியாளர் கவிதா (36) இருவரும் ரூ.7 ஆயிரம் லஞ்சம் கேட்டார்களாம்.. இதனை கொடுக்க விரும்பாத கார்த்திகேயன், திருப்பூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீஸாரிடம் அளித்துவிட்டார். அதன்பேரில் ரசாயனம்தடவிய ரூபாய் நோட்டுகளை, கார்த்திகேயனிடம் போலீஸார் கொடுத்துவிட்டார். இறுதியில், விஏஓ, அவரது உதவியாளர் கவிதாவுடன் கைதானார்.



இதோ இன்னொரு கைது நடவடிக்கை நடந்து, மாவட்டத்துக்கு அதிர்ச்சியை தந்து வருகிறது.. பல்லடம் தாலுகாவுக்குட்பட்ட கே.அய்யம்பாளையத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருபவர் ரேவதி.. இவருக்கு 44 வயதாகிறது.

இவரிடம் சொத்து மதிப்பு சான்றிதழ் வேண்டி பல்லடம் ஊராட்சி ஒன்றிய அலுவலக ஒப்பந்ததாரர் கதிர்வேல் என்பவர் விண்ணப்பித்துள்ளார். இதனை பெற்ற விஏஓ ரேவதி, சான்றிதழ் வழங்க ரூ.15 ஆயிரம் லஞ்சம் வழங்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

ஆனால், லஞ்சம் வழங்க விரும்பாத கதிர்வேல், இது தொடர்பாக திருப்பூர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறையினரிடம் புகார்அளித்துள்ளார். புகாரின் பேரில், லஞ்ச ஒழிப்புத் துறையினர் வழங்கிய ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுக்களை விஏஓவிடம், கதிர்வேல் கொடுத்துள்ளார். அப்போது, மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள், விஏஓ ரேவதியை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர். தொடர்ந்து, லஞ்ச பணத்தை பதுக்கி வைத்துள்ளாரா? என்று அதிகாரிகள் சோதனை நடத்தி வருகிறார்கள்.

சொத்து மதிப்பு சான்று வழங்க 15 ஆயிரம் லஞ்சம் பெற்ற விஏஓ கைது செய்யப்பட்ட சம்பவம் வருவாய்த்துறை வட்டாரத்தில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி கொண்டிருக்கிறது. அதிலும் பெண் அதிகாரிகளே இப்படி லஞ்சம் வாங்கி கைதாவது, தமிழக மக்களுக்கு கவலையையும், வருத்தத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

இப்படித்தான் சமீபத்தில், திருப்பூரை சேர்ந்த ஜீவா என்பவர், வாரிசு சான்றிழ் கேட்டு, நல்லூர் வருவாய் ஆய்வாளரான மைதிலி என்பவரிடமும் அணுகியிருக்கிறார்.. அதற்கு 2,000 ரூபாய் லஞ்சம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார் மைதிலி.. முதலில் 7 ஆயிரம் கேட்டுள்ளார்..பிறகுபேரம் பேசி 2 ஆயிரம் தரும்படி கேட்டுள்ளார். ஆனால், ஜீவா போலீசில் புகார் செய்யவும் மைதிலி கைதானார்.

பெருந்துறையை சேர்ந்த மைதிலிக்கு 43 வயதாகிறது.. முதலில் வாரிசு சான்றிதழ் தருவதற்கு ஜீவாவிடம் 7 ஆயிரம் லஞ்சம் கேட்டாராம்.. ஒருபோதும் லஞ்சம் தர மாட்டேன் என்று ஜீவா சொல்லவும்தான், படிப்படியாக லஞ்சப்பணத்தை பேரம் பேசி, ரூ.2 ஆயிரமாக குறைத்தாராம்.

இத்தனை வருட காலம், பொறுப்பு மிக்க உயர்பதவியை வகித்துவிட்டு, வெறும் 2 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கி, பொதுவெளியில் அசிங்கப்பட்டார் இந்த பெண் அதிகாரி.. அதேபோல, இப்போது விஏஓ ரேவதியும் சிக்கியிருப்பது, வருத்தத்தை ஏற்படுத்தி வருகிறது.

# மகளின் திருமணம் தாமதமானதால் விபரீத முடிவு: கோவை அரசு பள்ளி ஆசிரியை தற்கொலையில் திடுக் தகவல்

கோவை: மகளின் திருமணம் தாமதத்தால் அரசு பள்ளி ஆசிரியை பெட்ரோல் ஊற்றி தற்கொலை செய்து கொண்டது போலீஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கோவை அருகேயுள்ள அரிசி பாளையத்தைச் சேர்ந்தவர் பத்மா(53). இவரது கணவர் சுந்தர்ராஜன் உயிரிழந்து விட்டார். இவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். பத்மா, வழுக்குப் பாறையில் உள்ள அரசு உயர் நிலைப் பள்ளியில், ஆங்கிலப் பிரிவு ஆசிரியையாக பணியாற்றி வந்தார். இவர், நாச்சிபாளையம் வழுக்குப்பாறை வழித்தடத்தில் உள்ள, தனியாருக்கு சொந்தமான தோட்டம் அருகே பெட்ரோல் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். மதுக்கரை போலீஸார் சடலத்தை கைப்பற்றி விசாரணை நடத்தினர்.



கடந்த 18ம் தேதி வேலைக்குச் செல்வதாக கூறிவிட்டு சென்ற பத்மா மாலையில் வீடு திரும்பவில்லை. பத்மாவின் மகனான கல்லூரி மாணவர் லட்சுமி நாராயணன், தாயுடன் பணியாற்றும்சக ஆசிரியைக்கு போன் செய்து விசாரித்த போது, அவர் அன்று பள்ளிக்கு வரவில்லை எனத் தெரிந்தது. அதிர்ச்சியடைந்த அவர், மதுக்கரைபோலீஸில்புகார் அளித்தார். அவரை தேடி வந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். ஆசிரியை பத்மா, வீட்டிலிருந்து புறப்படும்போது, செல்போன், வழக்கமாக அணியும் நகைகள் ஆகியவற்றை கழற்றி வைத்து விட்டுச் சென்றுள்ளார்.

சடலம் மீட்கப்பட்ட பகுதியில் உள்ள பெட்ரோல் பங்கிற்கு சென்று முதலில் தனது வாகனத்துக்கு பெட்ரோல் போட்டுள்ளார். தொடர்ந்து மற்றொரு வாகனம் வீட்டில் உள்ளது, அதற்கு பெட்ரோல் தேவைப்படுகிறது எனக் கூறி கேனில் பெட்ரோல் வாங்கியுள்ளார். இக்காட்சிகள் அங்குள்ள சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளன. மகளுக்கு திருமணம் தாமதமாகி வந்தது, மகனின் எதிர்காலம் குறித்த கவலை, எதிர்பாராதவிதமாக குடும்பத்தில் ஏற்பட்ட பணச் செலவுகள் போன்றவற்றால் மன அழுத்தத்தில் இருந்த பத்மா, மேற்கண்ட விபரீத முடிவை எடுத்தது விசாரணையில் தெரியவந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

# மதுரை தெப்பக்குளம் பகுதியில் இன்று உணவு பாதுகாப்பு துறை சார்பாக நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி

மதுரை, மார்ச்.23

மதுரை தெப்பக்குளம் பகுதியில் இன்று உணவு பாதுகாப்பு துறை சார்பாக நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் மா. சௌ.சங்கீதா மாணவ மாணவியர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கிவைத்து, உணவு பாதுகாப்பு நடவடிக்கைகளில் சிறப்பாக செயல்பட்ட பல்வேறு நிறுவனங்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். உடன் மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா, மாநகர காவல் துணை ஆணையர் இனிகோ திவ்யன், மாநகராட்சி மண்டல தலைவர் முகேஷ் சர்மா, மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் ஜெயராம பாண்டியன் உட்பட பலர் உடன் இருந்தனர்.



# தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஏ.வி.ஆர். எம்.வி கலையரங்கில் தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சியினை வருவாய் மேலாண்மைத்துறை அமைச்சர் மற்றும் பேரிடர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பார்வையிட்டார்கள். தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணிஸ்ரீகுமார், சங்கரன் கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா. வாசுதேவ நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.சதன்திருமலைக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது,



தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் உள்ள பொது மக்கள் புகைப்படக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ள நலத்திட்ட உதவிகள், ஆய்வுப்பணிகள் உள்ளிட்ட பல்வேறு புகைப்படத்தினை பார்வையிட்டு தங்களுக்குத் தேவையான நலத்திட்டங்களை அடைந்து பயன்பெற வேண்டும் என வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் தெரிவித்தார்கள். கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தொடர்ந்து, தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டுள்ள புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் அனைவரும் பார்வையிட்டார்கள். புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டுஅரசின்திட்டங்களை பற்றி பொது மக்கள் அறிந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் கவிதா. சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி, சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் பி.லாலா.சங்கரபாண்டியன், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் பொன்முத்தையா பாண்டியன், மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்ம மாரிமுத்து, உதவி மக்கள் தொடர்பு அலுவலர்(செய்தி ரா.ராமசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டெல்லி, மும்பை, பெங்களூரு, கோவை உள்ளிட்ட நகரங்களுக்கு தென்காசியில் இருந்து புதிய எக்ஸ்பிரஸ் ரெயில்கள்: பாஜக மாவட்ட தலைவர், மத்திய ரெயில்வே அமைச்சரிடம் கோரிக்கை

தென்காசி, மார்ச்.23

டெல்லி, மும்பை, பெங்களூரு, கோவை உள்ளிட்ட நகரங்களுக்கு தென்காசியில் இருந்து புதிய எக்ஸ்பிரஸ் ரெயில்கள் இயக்கப்பட வேண்டும் என்று மத்திய ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிடம், தென்காசி மாவட்ட பாஜக தலைவர் ஆனந்தன் அய்யாசாமி கோரிக்கை மனு அளித்தார்.

பாஜகதென்காசிமாவட்ட தலைவர் ஆனந்தன் அய்யாசாமி, மத்திய ரெயில்வே அமைச்சர்அஸ்வினிவைஷ்ணவை நேரில் சந்தித்து தென்காசிக்கான ரெயில் தேவைகள் குறித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். அந்த மனுவில் கூறி இருப்பதாவது:

தென்னிந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப மையமான தென்காசிக்கு மேம்பட்ட ரெயில் சேவைகள் வழங்குவதற்கான அவசர தேவையை தாங்கள் கருணையுடன் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பண்டையகால பாண்டிய அரசின் தலைநகராக விளங்கிய தென்காசி மற்றும் செங்கோட்டை ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்கள், சங்க இலக்கியப் பாரம்பரியமும், பிரசித்திபெற்ற காசி விஸ்வநாதர் கோயில் போன்ற இந்து புனிதத் தலங்களும் உள்ள பகுதிகளாக உள்ளன. தென்காசி, சிவகாசி, ராஜபாளையம், செங்கோட்டை போன்ற பகுதிகள்தொழில், தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் ஆன்மிகத்தில் வேகமான வளர்ச்சியைக் கண்டு வருகின்றன. இருப்பினும், முக்கிய நகரங்களுக்கு நேரடி ரெயில் சேவைகள் இல்லாததால் மக்கள் பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.



இந்தப் பகுதியின் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை ஆதரிக்கும் வகையில், கீழ்காணும் கோரிக்கைகள் கருணையுடன் பரிசீலிக்கப்பட வேண்டும் என தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

தென்காசி – பெங்களூரு இடையே புதிய எக்ஸ்பிரஸ் ரயில் சேவை அறிமுகம் செய்ய வேண்டும். இந்த புதிய ரெயில் ராஜபாளையம், சிவகாசி, தென்காசி போன்ற நகரவாசிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். தொழில்துறை வளர்ச்சி, வேலை வாய்ப்புகள் மற்றும் முழுமையான பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

வண்டி எண் : 06029/30 – திருநெல்வேலி – மேட்டுப்பாளையம் வாரமிருமுறை எக்ஸ்பிரஸ் ரெயிலை (தென்காசி, மதுரை வழியாக) தொடர்வண்டியை நிரந்தரமாக “சிறுவானி எக்ஸ்பிரஸ்” என்ற பெயரில் இயக்க வேண்டும். இந்த ரயில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக சிறப்பு ரெயிலாக இயக்கப்பட்டு வருகிறது. ஒரு பயணத்திற்கும் சுமார் ₹.8 இலட்சம் வருமானத்தை ஈட்டும் அளவில் மக்களிடையே பெரிய வரவேற்பு பெற்றுள்ளது. மேலும்திருநெல்வேலியில் காத்திருக்கும் வண்டி எண்: 22605/06 புருலியா எக்ஸ்பிரஸ் ரெயிலின் லைஓவர் ரேக் (lieover rake) பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர சேவையாக மாற்ற இயலும்.

★ வண்டி எண்: 06003/04 – திருநெல்வேலி – தாம்பரம் வாராந்திர எக்ஸ்பிரஸ் ரெயிலை (தென்காசி, மதுரை வழியாக) “தாமிரபரணி எக்ஸ்பிரஸ்” என பெயரிட்டு நிரந்தரமாக இயக்க வேண்டும். இந்த ரயில் கடந்த 5 ஆண்டுகளாக சிறப்பு ரயிலாக இயக்கப்பட்டு வருகிறது. ஒரு பயணத்திற்கும் சுமார் ₹10 இலட்சம் வருமானம் ஏற்படுத்தும் அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. திருநெல்வேலியில் காத்திருக்கும் வண்டி எண்: 22629/30 தாதர் எக்ஸ்பிரஸ் ரயிலின் லைஓவர் ரேக் (lie over rake) மூலம் இந்த சேவையை நிரந்தரமாக்க முடியும். எண்டி எண்: 11021/11022 மும்பை – திருநெல்வேலி சாளுக்கியா எக்ஸ்பிரஸ் ரெயிலை செங்கோட்டை வரை நீட்டிக்க வேண்டும். இந்த நீட்டிப்பு வழித்தடத்தில் கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம், பாவூர்சத்திரம் மற்றும் தென்காசி ஆகிய முக்கிய நகரங்கள் சேர்க்கப்பட வேண்டும். பயணிகள் நலனுக்காக மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, இந்த ரயிலில் எல்எச்பி வகை பெட்டிகளை (மாடர்ன் கோச்கள்) பயன்படுத்தும் வகையிலும் மாற்றம் தேவைப்படுகிறது. இச்சேவை நீட்டிப்பின் மூலம், தென்காசிக்கு மும்பை நகரத்துடன் முதல் முறையாக நேரடி ரெயில் சேவை கிடைக்கும், இது தொழில் வளர்ச்சிக்கும், சுற்றுலா வளர்ச்சிக்கும் பெரிதும் பயனளிக்கும்.

வண்டி எண்: 12651/12652 தமிழ்நாடு சம்பர்க் கிராந்தி எக்ஸ்பிரஸ் (மதுரை டெல்லி) ரெயிலை தென்காசி வழியாக திருநெல்வேலி வரை நீட்டிக்க வேண்டும். இந்த நீட்டிக்கப்பட்ட வழித்தடம் விருதுநகர், ராஜபாளையம், தென்காசி, பாவூர்சத்திரம் மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய ஊர்களை கடக்க வேண்டும். இவ்வாறு நீட்டிக்கப்பட்டால், தென்காசிக்கு தேசியத் தலைநகரான டெல்லியுடன் முதல் முறையாக நேரடி ரெயில் சேவை கிடைக்கும். இது மாணவர்கள், தொழில்முனைவோர் மற்றும் தொழில்நிபுணர்கள் ஆகியோருக்கு பயனளிக்கக்கூடிய, சென்னை

# பாம்பன் மீனவர்களுக்கு ரூ.18 லட்சம் அபராதம்: இலங்கை நீதிமன்றம் உத்தரவு

ராமேஸ்வரம், மார்ச்.23

ராமநாதபுரம் மாவட்டம், பாம்பனில் இருந்து, கடந்த 6ம் தேதி ஆரோக்கியம் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், விசைப்படகினையும், அதிலிருந்த ஆரோக்கியம், செல்வம், ஜெயாஸ்டன், ஜோஸ்வா, சீமோன் உள்ளிட்ட 14 மீனவர்களையும் சிறைபிடித்தனர். இதனைத்தொடர்ந்து அவர்களை தலைமன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வவுனியா சிறையில் அடைத்தனர்.

இவர்களின் காவல் நேற்று நிறைவடைந்ததை தொடர்ந்து தலைமன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது மீனவர்கள் 14 பேருக்கும், இலங்கை மதிப்பில் தலா ரூ.4.50 லட்சம் அபராதம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. மொத்த அபராதம் இந்திய மதிப்பில் ரூ.18 லட்சம் ஆகும். மேலும் மீனவர்களின் விசைப்படகு நாட்டுடமையாக்கப்பட்டு உத்தரவிடப்பட்டது. அபராத தொகை கட்டிய பின் விடுதலை செய்யப்படுவார்கள் என யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடும் போட்டி வெற்றி பெற்ற அணிகளுக்கு பதக்கங்கள்: துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்

சென்னை, மார்ச்.23

25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடும் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதக்கங்களை வழங்கி கவுரவித்தார். 25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடும் போட்டியை தமிழ்நாடு காவல்துறை நடத்தியது. அதன்படி 202425ம் ஆண்டுக்கான போட்டி கடந்த 17ம் தேதி செங்கல்பட்டு மாவட்டம் ஒத்திவாக்கத்தில் உள்ள தமிழ்நாடு கமாண்டோ பள்ளி பயிற்சி வளாகத்தில் தொடங்கியது. இந்த போட்டியில் அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மத்திய ஆயுதப் படை பிரிவுகளிலிருந்து 704 காவல்துறையினர் கொண்ட 30 அணிகள் பல்வேறு பிரிவுகளில் போட்டியிட்டனர்.



25வது அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடும்போட்டியின்நிறைவு விழா நேற்று எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடந்தது. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டார். முன்னதாக, காவல்துறையின் அலங்கார காப்பு அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக்கொண்டார். பின்னர், ரைபிள் துப்பாக்கி சுடும் கோட்டியில் முதல் இடம் பிடித்து ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை அசாம் ரைபிள்ஸ் பாதுகாப்பு படைக்கு உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். இரண்டாவது இடம் பிடித்த எல்லை பாதுகாப்பு படைக்கும், 3வது இடத்தை பிடித்த அசாம் மாநில காவல்துறைக்கும் கோப்பைகளை வழங்கினார்.

பிஸ்டல் மற்றும் ரிவால்வர்துப்பாக்கி சுடும் போட்டியில் ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை மத்திய சேமக் காவல்படையும், 2வது இடத்தை அசாம் ரைபிள்ஸ் பாதுகாப்பு படையும், 3வது இடத்தை தமிழ்நாடு காவல்துறையும் பிடித்தது. அவர்களுக்கும் துணை முதல்வர் கோப்பைகளை வழங்கி கவுரவித்தார். இந்த துப்பாக்கி சுடும் போட்டியில் மாநிலங்களுக்கு இடையே ஒட்டு மொத்தமாக சிறப்பாக செயல்பட்ட அணியாக சாம்பியன்ஷிப் கோப்பையை தமிழ்நாடு காவல்துறையும், அதனை தொடர்ந்து 2வது இடத்தை ஒடிசா மாநில காவல்துறையும் பிடித்தனர். இந்நிகழ்ச்சியில் உள்துறை செயலாளர் தீரஜ்குமார், தமிழ்நாடு டிஜிபி சங்கர் ஜிவால், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, மயிலாப்பூர் எம்எல்ஏ மயிலை த.வேலு, எழும்பூர் தொகுதி எம்எல்ஏ இ.பரந்தாமன், சென்னை மாநகரட்சி மேயர் பிரியா, டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உள்ளிட்ட உயர் காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ஏரியில் மூழ்கி 2 சிறுவர்கள் உயிரிழப்பு

சேத்துப்பட்டு, மார்ச்.23

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு அடுத்த அனாதிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர் அருள்குமார், விவசாய கூலி தொழிலாளி. இவருக்கு ஒரு மகள், ஒரு மகன். இதில் மகன் பரத்(8) ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 3ம் வகுப்பு படித்து வந்தான். அருள்குமாரின் உறவினரான அதே பகுதியை சேர்ந்த ராஜா என்பவர், சென்னையில் தங்கி கூலி வேலை செய்து வருகிறார்.

இவர் 2 நாட்களுக்கு முன்பு குடும்பத்துடன் சொந்த கிராமத்திற்கு வந்துள்ளார். இவரது மகன் தேவனேஷ்(4), நேற்று மாலை அருள்குமாரின் மகன் பரத்துடன் வீட்டின் அருகே உள்ள அனாதிமங்கலம் பெரிய ஏரி பகுதியில் இயற்கை உபாதை கழிக்க சென்றுள்ளான்.அப்போது ஏரியில் மூழ்கி பலியாகினர்.

# தேவகோட்டையில் வண்டு கடித்து முதியவர் பலி

தேவகோட்டை, மார்ச்.23

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, கிருஷ்ண ராஜபுரம் மேற்கு பகுதியில் ஆரோக்கியசாமி என்பவரது வீடு உள்ளது. இவரது வீட்டில் நேற்று மதியம் மரம் வெட்டியுள்ளனர். அப்போது அருகில் வசித்து வரும் எலக்ட்ரீசியன் சகுபர் (35), அவரது தந்தை ராஜா முகமது (65), தாயார் காதர் பாத் (60) மற்றும் மரம் வெட்டிய காளிமுத்துவை கொடிய விஷ வண்டுகள் கடித்தன. இதில் ராஜா முகமது பலியாகினர். மற்ற 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

# போதிய மழை இல்லாததால் ஆழியார் அணை நீர்மட்டம் 70 அடியாக சரிவு



பொள்ளாச்சி, மார்ச்.23

போதிய மழை இல்லாததால் ஆழியார் அணை நீர்மட்டம் 70 அடியாக சரிந்துள்ளது. பிஏபிதிட்டத்தில் முக்கிய நீராதாரமாக உள்ள கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த ஆழியார்அணைக்கு, பீடர் கால்வாய், அப்பர் ஆழியார், குரங்கு அருவி மற்றும் நீரோடைகள் வழியாக தண்ணீர் வருகிறது. இந்த அணையிலிருந்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாட்கள் தண்ணீர் திறக்கப்படுகிறது.

ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீர் விவசாயத்துக்கு மட்டுமின்றி குடிநீர் தேவைக்கும் பயன்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கோடை காலங்களில் பிஏபி திட்டத்தில் உள்ள அணைகளில் தண்ணீர் குறைந்து வறட்சியை சந்திக்கும்போது, ஆழியார் அணையில் மட்டும் ஓரளவு தண்ணீர் இருக்கும்.

இதில் கடந்த ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பெய்ததால், மொத்தம் 120அடி கொண்ட ஆழியார்அணையின் நீர்மட்டம், கடந்த ஜனவரி மாதம் வரை 100அடிக்கும் மேல் இருந்தது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக மழை இல்லாததால் ஆழியார் அணைக்கு தண்ணீர் வரத்து நாளுக்கு, நாள் குறைந்தது. இதனால் கடந்த இரண்டு மாதங்களில் அணையின் நீர்மட்டம் வெகுவாக சரிந்தது. நேற்று நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 70 அடியாக குறைந்துள்ளது. வினாடிக்கு 400 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தாலும், பழைய ஆயக்கட்டுபாசனபகுதி, கேரளா மற்றும் குடிநீர் தேவைக்கு என வினாடிக்கு 650 கன அடி தண்ணீர் திறக்கப்படுவது தொடர்ந்துள்ளது.

ஆழியார் அணையில் நீர்மட்டம் மிகவும் குறைந்து வருவதால், அணை மதகு அருகே மற்றும் கரையோரங்களில் உள்ள பாறை, மணல்மேடுகள்வெளியே தெரிந்து வறண்ட நிலம் போல் உள்ளது. அணையின் நீர்மட்டம் குறைந்து வரும்நிலையில், பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு இன்னும் குறிப்பட்ட வாரம் மட்டுமே அணையிலிருந்து தண்ணீர் திறப்பு இருக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மழை பெய்யாததால் ஆழியார் அணைக்கு தண்ணீர் வரத்து குறைந்துள்ளதால் விவசாயிகள் வேதனையடைத்துள்ளனர்.

# அரசு மானியத்தில் கால்நடை பண்ணை அமைத்திட தொழில்முனைவோருக்கு அழைப்பு



சென்னை, மார்ச்.23

அரசு மானியத்தில் கால்நடை பண்ணை அமைத்திட தொழில்முனைவோருக்கு தமிழ்நாடு அரசு அழைப்பு விடுத்துள்ளது. தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கையினை உயர்த்திடவும், தொழில்முனைவோர்ககளை உருவாக்கிடவும் புதிய கால்நடை பண்ணைகள் அமைப்பதற்க்கு 2021 – 2022 ஆம் நிதியாண்டில் இருந்து அரசு நிதி உதவி வழங்கி தொழில்முனைவோர்களை ஊக்குவித்து வருகின்றது. புதிய கோழிபண்ணைகள், செம்மறியாடு மற்றும் வெள்ளாடு பண்ணைகள், பன்றி பண்ணைகள் உருவாக்குவதின் வழி மாநிலத்தின் இறைச்சி, மற்றும் முட்டை உற்பத்தி அதிகரிப்பது மற்றும் புதிய வேலை வாய்ப்புகளை அதிகரிக்க இலக்காக கொண்டு திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் தீவனம், தீவனபயிர் சேமிப்பு, தீவன விதைகள் உற்பத்தி, கோழி வளர்ப்பு, செம்மறியாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு மற்றும் பன்றி வளர்ப்ப பண்ணைகள் அமைத்து தொழில் முனைவோரை உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நாட்டு கோழி பண்ணையுடன் கூடிய குஞ்சு பொரிப்பகம் அமைக்க ரூ.25.00 லட்சம் வரையும், செம்மறி ஆடு / வெள்ளாடு பண்ணை அமைக்க ரூ. 10.00 லட்சம் முதல் ரூ. 50.00 லட்சம் வரையும், பன்றி வளர்ப்பு பண்ணை அமைக்க ரூ. 15.00 லட்சம் முதல் ரூ. 30.00 லட்சம் வரையும், வைக்கோல், ஊறுகாய்புல், மொத்த கலப்பு உணவு (TMR), தீவன தொகுதி, மற்றும் தீவன சேமிப்பு வசதிகள் பண்ணையம் அமைத்திட தொழில்முனைவோருக்கு மானியம் வழங்கபடுகிறது.

இத்திட்டத்தில் தனி நபர், சுய உதவி குழுக்கள்(SHG), விவசாய உற்பத்தியாளர்கள் அமைப்பு(FPO), விவசாய கூட்டுறவுகள், கூட்டு பொறுப்பு சங்கங்கள் (JLG),பிரிவு8நிறுவனங்கள் விண்ணபிக்க தகுதியானவர்கள் ஆவர். இந்த திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் https://nlm.udyamimitra.in/ என்கிற இணையதளம் வாயிலாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். இத்திட்டம் தொடர்பான முழுமையான தகவல்களை http://www.tnlda.tn.gov.in/என்கிற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இத்திட்டத்தில் விண்ணப்பிக்க தேவையான விரிவான திட்ட அறிக்கையினை விண்ணப்பதாரர்கள் http://www.tnlda.tn.gov.in/ என்கிற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ள மென்பொருள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் விவரங்கள் அறிய அருகில் உள்ள கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை மருத்துவர்கள், மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள், அருகில் உள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவன அலுவலர்கள் மற்றும் தமிழ் நாடு கால்நடை மேம்பாட்டு முகமை, சென்னை அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

# சினிமா படப்பிடிப்பு துணை நடிகர் மயங்கி விழுந்து சாவு

கோவை மார்ச்.23

கோவை மருதமலை அடிவாரத்தில் மலையாள சினிமா படப்பிடிப்பு நடைபெற்று வந்தது. இந்த படத்தில் நடித்து வரும் துணை நடிகர்கள் மருதமலை அடிவாரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் தங்கியிருந்தனர். அவர்களுடன் துணை நடிகரான கேரளா மாநிலம் மலப்புரம் அருகே திருப்பளூர் பகுதியைச் சேர்ந்த ஹரிதாசன் (39) என்பவரும் தங்கி இருந்தார்.

அவருக்கு திடீரென உடல்நிலை சரியில்லாமல் போனது.

மயங்கி விழுந்த அவரை சக நடிகர்கள் அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரை பரிசோதனைசெய்த டாக்டர், வழியிலேயே இறந்துவிட்டதாக தெரிவித்தார். இது குறித்து வடவள்ளி போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருப்புவனம் பூமாரியம்மன் கோயிலில் பங்குனி திருவிழா கொடியேற்றம்



திருப்புவனம், மார்ச் 23

திருப்புவனம் பூமாரியம்மன் கோயிலில் பங்குனி திருவிழா நேற்று இரவு கொடியேற்றத்துடன்கோலாகலமாகதுவங்கியது. சிவகங்கை மாவட்டம், திருப்புவனம்புதூரில் பூமாரியம்மன் ரேணுகா தேவி கோயில் உள்ளது. இங்கு ஆண்டுதோறும் பங்குனி திருவிழா 10 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறும். அதன்படி இந்தாண்டு திருவிழா நேற்று இரவு கொடியேற்றத்துடன் தொடங்கியது. முன்னதாக, அம்மனுக்கு சிறப்பு பூஜை நடைபெற்றது. இதையடுத்து கொடிமரத்திற்கு சிறப்பு அபிஷேகம், பூஜை நடைபெற்றது. இரவு 10 மணியளவில் கொடியேற்றம் நடந்தது.

இதைதொடர்ந்து பக்தர்கள் காப்புக்கட்டி விரதம் தொடங்கினர். விழா நாட்களில் தினமும் அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறும். பக்தர்களுக்குஅன்னதானம் வழங்கப்படும். விழாவில் முக்கிய நிகழ்வாக வரும் 28ம் தேதி ஆயிரக்கணக்கான பக்தர்கள் அக்னிச்சட்டி, ஆயிரம் கண்பானை, மாவிளக்கு எடுத்தும், பொம்மை வைத்தும் நேர்த்திக்கடன் செலுத்துவர். இதற்கான ஏற்பாடுகளை சிவகங்கை தேவஸ்தானமேலாளர்இளங்கோ, கண்காணிப்பாளர் தண்ணாயிரம் மற்றும் விழா குழுவினர்செய்து வருகின்றனர்.

# மொழி கொள்கையை ஏற்க மறுப்பதால் தமிழ்நாடு பலிகடா: ஒன்றிய அரசு மீது வைகோ குற்றச்சாட்டு



புதுடெல்லி, மார்ச்.23

மாநிலங்களவையில் நேற்று மதிமுக தலைவர் வைகோ பேசுகையில், ‘‘ஒன்றிய பாஜ அரசின் இந்துத்துவா, ஆர்எஸ்எஸ் கொள்கை, இந்தி, சமஸ்கிருதம் திணிப்பு ஆகியவற்றை தமிழ்நாடு எதிர்க்கிறது. அதனால்தான் உள்துறை அமைச்சகம் தமிழ்நாட்டுக்கான பேரிடர்நிவாரணநிதியை ஒதுக்காமல் எங்களை பலிகடா ஆக்கி உள்ளது’’ என்றார். மொழிப்பிரச்னை தொடர்பான வைகோவின் கருத்துகளை ஆதரிப்பதாக அதிமுக உறுப்பினர் தம்பிதுரை தெரிவித்தார்.

# மாவோயிஸ்ட்கள் குறித்து துப்பு கொடுத்தால் ரூ.2 லட்சம் பரிசு: என்ஐஏ அறிவிப்பு

கோவை, மார்ச்.23

கேரள மாநிலம் எடக்கரா காவல் நிலையத்தில் கடந்த 2021ம் ஆண்டு மாவோயிஸ்ட்கள் கார்த்திக், ஷர்மிளா, சந்தோஷ்குமார் ஆகிய 3 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். தலைமறைவான 3 பேரையும் போலீசார் தேடி வந்தனர். தற்போது இந்த வழக்கு என்ஐஏ (தேசிய புலனாய்வு முகமை) வசம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

சமீபத்தில் இவர்கள் 3 பேரையும் கைது செய்ய என்ஐஏ கோர்ட் கைது வாரன்ட் பிறப்பித்துள்ளது.

இதனைத்தொடர்ந்து கேரளா மட்டுமல்லாது தமிழ்நாடு முழுவதும் 3 பேரின் புகைப்படத்துடன் மக்கள் அதிகம் கூடும் இடங்களான பஸ் நிலையம், ரயில் நிலையங்களில் போஸ்டர் ஒட்டி என்ஐஏ விசாரித்து வருகிறது. கோவை ரயில் நிலையத்திலும் போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது. அதில், மாவோயிஸ்ட்கள் 3 பேர் குறித்தும் தகவல் கொடுத்தால் தலா ரூ.2 லட்சம் ரொக்கப்பரிசு வழங்கப்படும். தகவல் கொடுப்பவர்களின் பெயர், முகவரி வெளியிடாமல் ரகசியம் காக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# அனுமதியின்றி போராட்டம் நடத்தினால் உடனடி அபராதம் விதிக்கலாம்: அரசுக்கு ஐகோர்ட் யோசனை




சென்னை, மார்ச்.23

அனுமதியின்றிபோராட்டம் நடத்தினால் அபராதம் விதிக்கலாமே என சென்னைஉயர்நீதிமன்றம் தமிழகஅரசுக்குயோசனை தெரிவித்துள்ளது. இலங்கை தமிழர்கள் இனப்படுகொலையை கண்டித்தும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவும் கடந்த 2013 மற்றும் 2017ம் ஆண்டுகளில் அரியலூரில் ரயில் மறியலில் ஈடுபட்டதாக அமைச்சர் சிவசங்கரன் உள்பட 1000க்கும் மேற்பட்டோருக்கு எதிராக 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்குகளை ரத்து செய்ய கோரி, அமைச்சர் சிவசங்கரன் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி இளந்திரையன், இருவழக்குகளையும் ரத்து செய்து உத்தரவிட்டார். முன்னதாக நீதிபதி, அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்டதாக வழக்குகள் பதிவு செய்து நீதிமன்றத்திற்கு சுமை ஏற்படுத்துவதற்கு பதில் உடனடி அபராதம் விதிக்கலாமே என அரசுக்கு யோசனை தெரிவித்தார்.

# கோடை விடுமுறையால் சென்னை விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம் அதிகரிப்பு: ‘செக்கிங் கவுன்டர்’ 72ல் இருந்து 120 ஆக உயர்கிறது



சென்னை, மார்ச்.23

சென்னைவிமானநிலையத்தில், கோடை விடுமுறை பயணிகள் கூட்டம் அதிகரிக்க தொடங்கியுள்ளது. குறிப்பாக சர்வதேச முனையத்தில், பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. இதையடுத்து சென்னைசர்வதேசமுனையத்தில் பயணிகளின் செக்கின் கவுன்டர்கள் 72லிருந்து 120 ஆக அதிகரிக்கப்படுகிறது. சென்னை விமான நிலையத்தில் பயணிகள் எண்ணிக்கை, சர்வதேசம் மற்றும் உள்நாட்டு முனையங்களில் நாள் ஒன்றுக்கு சுமார் 50 ஆயிரத்தில் இருந்து 55 ஆயிரம் வரை இருந்தது. அந்த எண்ணிக்கை சமீப காலமாக, மேலும் அதிகரித்து 60 ஆயிரத்தையும் கடந்து கொண்டு இருக்கிறது.

குறிப்பாக சர்வதேச முனையமான டெர்மினல் 2 பயணிகள் கூட்டத்தால் நிரம்பி வழிகிறது. நள்ளிரவு, அதிகாலை மற்றும் வார கடைசி நாட்கள் போன்றவைகளில், ஒரே நேரத்தில் பல விமானங்கள், ஒன்றன்பின் ஒன்றாக இயக்கப்படுவதால் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. சென்னை சர்வதேச முனையத்தில் பயணிகளுக்கு, பாதுகாப்பு சோதனைகள் நடத்தக்கூடிய கவுன்டர்கள் தற்போது, ஏ, பி, சி என்று 3 பிரிவுகளாக, ஒரு பிரிவுக்கு 24 கவுன்டர்கள் வீதம், மொத்தம் 72 கவுன்டர்கள் உள்ளன. இந்த 72 கவுன்டர்களிலும், பயணிகள் கூட்டம் அதிக அளவில் இருப்பதால், பயணிகள் சோதனைகளை முடித்துவிட்டு, விமானங்களில் ஏறுவதற்கு காலதாமதம் ஆகின்றன. இதனால் துபாய், சிங்கப்பூர், கோலாலம்பூர், அபுதாபி, லண்டன் உள்ளிட்ட விமானங்கள் தாமதமாக புறப்படும் நிலை ஏற்படுகிறது.

இந்நிலையில் வருகிற கோடை விடுமுறைகளில் பயணிகள் கூட்டம் மேலும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், கூடுதல் செக்கின் கவுன்டர்கள், சென்னை சர்வதேச முனையம் டெர்மினல் 2ல் ஏற்படுத்த இந்திய விமான நிலைய ஆணையம்முடிவுசெய்து, துரித நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன்படி தற்போது பேஸ் 2 கட்டுமான பணிகள், டெர்மினல் 3 வேலைப்பாடுகள் நடந்து வருகின்றன. அந்த டெர்மினல் 3ல் அமைக்கப்படும் செக்கிங் கவுன்டர்களில் 48 கவுன்டர்கள், டெர்மினல் 2 செக்கிங் கவுன்டர்களுடன் இணைக்கப்பட்டு, 120 கவுன்டர்களாக, பகுதி டி, இ புதிதாக உருவாக்க திட்டமிடப்பட்டு, அந்த பணிகள் நடந்து வருகின்றன. இந்த பணிகள் முடியும்போது, பயணிகள் கூட்ட நெரிசல்கள் இல்லாமல், விமானங்களில் ஏற முடிவதோடு, விமானங்களும் தாமதம் இல்லாமல் புறப்பட்டு செல்லும் வாய்ப்பு ஏற்படும் என சென்னை விமான நிலைய அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கின்றனர்.

# மீட்டர் விற்பனையாளர்கள் கூடுதல் கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை: மின்சார ஒழுங்குமுறை ஆணையம் எச்சரிக்கை



சென்னை, மார்ச்.23

மீட்டர் விற்பனையாளர்கள் நுகர்வோரிடம் கூடுதல் கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சார ஒழுங்குமுறை ஆணையம் எச்சரித்துள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் மின் உற்பத்தி செய்து நுகர்வோருக்கு விநியோகம் செய்து வருகிறது. நுகர்வோர் பயன்படுத்தும் மின்சாரத்தை மின் மீட்டர்கள் வாயிலாக கணக்கெடுத்து நுகர்வோரிடம் இருந்து கட்டணம் வசூலிக்கிறது. இந்நிலையில் புதிதாக மின் இணைப்புக்கு விண்ணப்பிக்கும் நுகர்வோர் அல்லது மீட்டர் பழுது காரணமாக மாற்றுவோருக்கு மின் வாரியம் மீட்டர்களை வழங்கும், அதற்கான கட்டணத்தையும் பெறும். ஒரு சில சமயங்களில் மின் வாரியத்திடம் மீட்டர் இல்லாத நிலை ஏற்படுகிறது.

இதனால் மின் இணைப்புக்கு காத்திருப்போர் உடனடியாக மீட்டர் பொறுத்த தனியார்நிறுவனங்களிடம் இருந்து மீட்டர் வாங்கும் நடைமுறையை கடந்த ஆண்டு தமிழ்நாடு மின் வாரியம் அறிமுகம் செய்தது.

இந்த திட்டத்தின் படி நுகர்வோர் நேரடியாக தனியாரிடம் இருந்து மீட்டரை வாங்கலாம், ஆனால் மீட்டருக்கான விலையை மின் பகிர்மான கழகம் தான் நிர்ணயித்துள்ளது. இந்நிலையில் ஒரு சில இடங்களில் தனியார் மின் விற்பனையாளார்கள் நுகர்வோரிடம் இருந்து கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக புகார் எழுந்துள்ளது.

குறிப்பாக ரூ.8000 மதிப்பிலான 100 ஆம்பியர் மீட்டருக்கு ரூ.17,852 வசூலிக்கப்பட்டுள்ளதாக மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு புகார் வந்துள்ளது. இதையடுத்து மீட்டருக்கு தனியார் விற்பனையாளர்கள் கூடுதல் கட்டணம் வசூலித்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மின் பகிர்மான கழத்திற்கு ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து மின்சாரஒழுங்குமுறைஆணையம் வெளியிட்ட உத்தரவில், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட மீட்டர் விற்பனையாளர்களுக்கும் மீட்டருக்கு அதிக கட்டணம் வசூலிக்கக் கூடாது என நோட்டீஸ் வழங்க வேண்டும். மேலும் இதனை மீறும் நிறுவனங்களின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட வேண்டும் எனக் கூறியுள்ளது.

# அரசு மானியத்தில் கால்நடை பண்ணை அமைத்திட தொழில் முனைவோருக்கு அழைப்பு: அரசு அறிவிப்பு

சென்னை, மார்ச்.23

தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று வெளியிடப்பட்ட அறிவிப்பு: தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கையினை உயர்த்திடவும், தொழில்முனைவோர்களை உருவாக்கிடவும் புதிய கால்நடை பண்ணைகள் அமைப்பதற்கு 2021 2022ம் நிதியாண்டில் இருந்து அரசு நிதி உதவி வழங்கி தொழில்முனைவோர்களை ஊக்குவித்து வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் தீவனம், தீவனபயிர் சேமிப்பு, தீவன விதைகள் உற்பத்தி, கோழி வளர்ப்பு, செம்மறியாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு மற்றும் பன்றி வளர்ப்பு பண்ணைகள் அமைத்து தொழில் முனைவோரை உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நாட்டு கோழி பண்ணையுடன் கூடிய குஞ்சு பொரிப்பகம் அமைக்க ரூ.25 லட்சம் வரையும், செம்மறி ஆடு, வெள்ளாடு பண்ணை அமைக்க ரூ.10 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரையும், பன்றி வளர்ப்பு பண்ணை அமைக்க ரூ.15 லட்சம் முதல் ரூ.30 லட்சம் வரையும், வைக்கோல், ஊறுகாய்புல், மொத்த கலப்பு உணவு, தீவன தொகுதி, மற்றும் தீவன சேமிப்பு வசதிகள் பண்ணையம் அமைத்திட தொழில்முனைவோருக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர்கள் https://nlm.udyamimitra.in/ என்கிற இணையதளம் வாயிலாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

இத்திட்டத்தில் விண்ணப்பிக்க தேவையான விரிவான திட்ட அறிக்கையினை விண்ணப்பதாரர்கள் http://www.tnlda.tn.gov.in/ என்கிற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ள மென்பொருள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தின கனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
23.3.2025

# நீலகிரி வனப்பகுதியில் ஆண் யானை உயிரிழப்பு



ஊட்டி, மார்ச்.23
சிங்காரா வனப்பகுதியில் வயது முதிர்வு காரணமாக ஆண் யானை உயிரிழந்தது. நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம், மசினகுடி வெளிமண்டலத்திற்கு உட்பட்ட சீகூர், தெங்குமரஹாடா, கல்லம்பாளையம் உள்ளிட்ட அடர்ந்த வனப்பகுதிகளில் காட்டு யானைகள் கணிசமான அளவு வாழ்கின்றன. இந்நிலையில், சிங்காரா வனச்சரகத்திற்கு உட்பட்ட வனப்பகுதியில் வனத்துறை ஊழியர்கள் நேற்று வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சிங்காரா வனப்பகுதியை ஒட்டியுள்ள நார்தன்ஹே காப்புக்காடு மற்றும் தனியார் காப்பி எஸ்டேட் எல்லைப் பகுதியில் ஆண் யானை ஒன்று இரண்டு தந்தங்களுடன் இறந்து கிடந்ததை பார்த்தனர். மேலும் அவர்கள் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தர்.

இதைத்தொடர்ந்து மசினகுடி துணை இயக்குநர் அருண்குமார் மற்றும் வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

பின்னர் தெப்பக்காடு வனக்கால்நடை மருத்துவர் ராஜேஷ் வரவழைக்கப்பட்டு உடற்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில், இறந்தது 48 வயது மதிக்கத்தக்க ஆண் யானை என்பதும், கடந்த சில நாட்களாக சரிவர உணவு உட்கொள்ளாமல் உடல் மெலிந்து இருப்பதும் தெரியவந்தது. யானையின் வயிறு மற்றும் குடல் பகுதியில் அதிகப்படியான ஒட்டுண்ணி புழுக்கள் காணப்பட்டது. யானை வயது முதிர்வு, நோய் பாதிப்பு காரணங்களால் உயிரிழந்திருக்கலாம் என கண்டறியப்பட்டது. இருப்பினும் ஆய்வுக்காக மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளது என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# போதையில் நடந்த கொடூரம்: பெண் சப்இன்ஸ்பெக்டரை பலாத்காரம் செய்ய முயன்ற சப்இன்ஸ்பெக்டர்

மதுரா, மார்ச்.23
உத்தரபிரதேச மாநிலம் மதுரா மாவட்டத்தில் மகோரா போலீஸ் நிலையத்தில் பணயமர்த்தப்பட்ட சப்இன்ஸ்பெக்டர் மோகித் ராணா என்பவர். அதே போலீஸ் நிலையத்தில் பெண் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்ய முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவத்தன்று இரவில் இருவரும் பணியில் இருந்துள்ளனர். அப்போது போதையில் இருந்த மோகித் ராணா, பெண் சப் இன்ஸ்பெக்டரின் அறையில் நுழைந்து, அவரை பலாத்காரம் செய்ய முயன்றுள்ளார்.

இது குறித்து பெண் சப் இன்ஸ்பெக்டர் போலீஸ் சூப்பிரண்டிடம் புகார் செய்தார். அதற்கு முன்பு தன்னிடம் ஆபாச படங்கள், வீடியோக்களை பார்க்க கட்டாயப்படுத்தியதாகவும் கூறி உள்ளார்.

இதையடுத்து துணை போலீஸ் சூப்பிரண்டு விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க அவர் உத்தரவிட்டார். விசாரணை நடக்க இருப்பதை அறிந்த மோகித் ராணா தனது போனில் இருந்த ஆபாச வீடியோக்களை அழித்துள்ளார்.

தனது போன் மற்றும் ஸ்மார்ட்வாட்சை வெளியே வீசியெறிந்துவிட்டார். இதையடுத்து மோகித் ராணா கைது செய்யப்பட்டார். அவரது செல்போனை தேடும் முயற்சியில் போலீசார் ஈடுபட்டனர்.

தொடர்ந்து நடந்த விசாரணையில், பெண்ணின் குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ராணா கைது செய்யப்பட்டு கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார்.

பின்னர் அவரை கோர்ட்டு காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

# 25 நாட்களுக்கு பிறகு தீவிர அரசியலில் களமிறங்கும் விஜய்?

சென்னை, மார்ச்.3
தமிழ் திரையுலகின் முன்னணி நடிகரான விஜய், தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் அரசியல் கட்சியை அண்மையில் தொடங்கினார். இதையடுத்து தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் அரசியல் மாநாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 27ந்தேதி பிரமாண்டமாக நடந்தது. இந்த மாநாட்டில் லட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டில் விஜய்யின் பரபரப்பான பேச்சு தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. மாநாட்டை தொடர்ந்து 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள தமிழக வெற்றிக்கழகம் தயாராகி வருகிறது. அதற்கேற்ப அரசியல் வியூகங்களை விஜய் அமைத்து வருகிறார். மேலும் தமிழகம் முழுவதும் கட்சிக்கு மாவட்ட செயலாளர்கள், புதிய நிர்வாகிகளை விஜய் நியமித்து வருகிறார்.

இந்த நிலையில், 25 நாட்களுக்கு பிறகு தீவிர அரசியலில் தவெக தலைவர் விஜய் களமிறங்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. விஜய் தற்போது நடித்து வரும் ஜனநாயகன் படப்பிடிப்பு இன்னும் 25 நாட்களில் நிறைவடைய உள்ளதாக கூறப்படுகிறது. படப்பிடிப்பை முடித்த கையோடு பூத் கமிட்டி மாநாடு, சுற்றுப்பயணம், மண்டல மாநாடு, பொது கூட்டங்களை நடத்த விஜய் திட்டமிட்டுள்ளதாகவும் ஏப்ரல் இறுதியில் பூத் கமிட்டி மாநாட்டை நடத்த இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சட்டம்ஒழுங்கை காக்கத் தவறியதை தமிழக அரசு நியாயப்படுத்த முடியாது அன்புமணி ராமதாஸ்

சென்னை மார்ச்.23
தமிழகத்தில் கொலை நடக்காத நாட்களே இல்லை எனும் அளவுக்கு சட்டம்ஒழுங்கு சீர்குலைவு ஏற்பட்டுள்ளது என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் குற்றம்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மக்கள் நடமாட்டம் மிகுந்த 100 அடி சாலையில் மனோஜ் என்ற கஞ்சா வணிகர் கொடூரமான முறையில் ஓட, ஓட வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அதுவும் காவல்நிலையத்தில் கையெழுத்திடுவதற்காக சென்ற போது அவரை ஒரு கும்பல் வெட்டிக் கொலை செய்திருக்கிறது என்பதிலிருந்தே தமிழகத்தில் கொலையாளிகள் காவல்துறை மீது எந்த அளவுக்கு அச்சமின்றி துணிச்சலுடன் செயல்படுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

காரைக்குடி கொலை செய்தி குறித்த பதட்டம் தணியும் முன்பே திருத்தணி அருகே 19 வயது இளைஞர் உடலில் 15 இடங்களில் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். தொலைக்காட்சிகளில் ஒரு தலைப்புச் செய்தி முடிந்து அடுத்தத் தலைப்புச் செய்தி வருவதற்குள் அடுத்தக் கொலை நடக்கும் அளவுக்கு கொலைகளின் எண்ணிக்கையும், வேகமும் அதிகரித்திருக்கிறது.

நெல்லையில் ஜாகிர் உசேன், ஈரோடு நசியனூரில் ஜான், காரைக்குரியில் மனோஜ் என தமிழ்நாட்டில் ஒவ்வொரு நாளும் கொடூரக் கொலைகள் நடைபெறாத நாளே இல்லை எனும் அளவுக்கு தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு நிலைமை சீர்கெட்டிருக்கிறது. கடந்த சில நாட்களில் நிகழ்ந்த 3 கொடியக் கொலைகளையுமே காவல்துறையினர் நினைத்திருந்தால் தடுத்திருக்க முடியும்.

இவர்களில் ஜாகிர் உசேன் தமது உயிர்க்கு அச்சுறுத்தல் இருப்பதாக காவல்துறையிடமே தெரிவித்திருந்தார். மற்ற இருவரும் குற்றப்பின்னணி கொண்டவர்கள். அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பது காவல்துறையினருக்கே நன்றாகத் தெரியும். ஆனாலும், அலட்சியமாக இருந்ததால்தான் இந்த படுகொலைகள் நடந்திருக்கின்றன.

ஜாகிர் உசேன், ஜான், மனோஜ் ஆகிய மூவரின் படுகொலைகளும் திடீரென உணர்ச்சி வேகத்தில் நடந்த படுகொலைகள் அல்ல. இவை அனைத்தும் நன்கு திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட படுகொலைகள்தான். இவற்றுக்காக பல நாட்கள் ஒத்திகையும், முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கொலைக்கான திட்டங்கள் வகுக்கப்படும்போது அவற்றை முன்கூட்டியே கண்டறிந்து தடுத்து நிறுத்துவதுதான் காவல்துறையின் பணி. ஆனால், அதில் கோட்டை விடும் காவல்துறை, கொலை நடந்த பிறகு குற்றவாளிகளை பிடித்து, அவர்களை துப்பாக்கியால் சுட்டு விட்டு, குற்றவாளிகளை சுட்டுப் பிடித்து விட்டதாக சப்பைக்கட்டு கட்டிக் கொண்டிருக்கிறது. இது காவல்துறைக்கு அழகு அல்ல.

கொலை நடந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம், கடந்த ஆட்சியை விட எங்கள் ஆட்சியில் கொலைகளின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்றெல்லாம் கூறுவதன் மூலம் சட்டம்ஒழுங்கை காக்கத் தவறியதை தமிழக அரசு நியாயப்படுத்த முடியாது. தமிழக அரசு மற்றும் காவல்துறையின் செயல்பாடுகள் மோசமாக சீரழிந்து வருவதையே தினசரி கொலைகள் காட்டுகின்றன. தமிழக அரசு இனியாவது விழித்துக் கொண்டு சட்டம்ஒழுங்கைக் காக்கவும், குற்றச்செயல்களைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

இவ்வாறு அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# சென்னை: இபைக் தீப்பிடித்து விபத்து குழந்தை பலியான 4 நாட்களில் தந்தையும் உயிரிழந்த சோகம்

சென்னை மார்ச்.23
சென்னை மதுரவாயல் அன்னை இந்திரா காந்தி நகர் பகுதியை சேர்ந்தவர் கவுதம். இவர் அப்பகுதியில் மனைவி மற்றும் 9 மாத கைக்குழந்தையுடன் வசித்து வந்தார். சம்பவத்தன்று தனது வீட்டில் அவரது இ பைக்கிற்கு சார்ஜ் போட்டிருந்தார். அப்போது சற்றும் எதிர்பாராத விதமாக பைக் திடீரென தீப்பிடித்து எரிந்தது. இந்த சம்பவத்தில் தம்பதி, குழந்தை உள்பட 3 பேருக்கும் தீக்காயம் ஏற்பட்டது. இதனையடுத்து 3 பேரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதனையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 9 மாத கைக்குழந்தை கடந்த 17ம் தேதி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தது. மேலும் குழந்தையின் தந்தை கவுதம் கவலைக்கிடமாக உள்ளதாக தகவல் வெளியானது. இந்த நிலையில் குழந்தையின் தந்தை கவுதம் இன்று மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். குழந்தைபலியான 4 நாட்களில் தந்தையும் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும்சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனையடுத்து குழந்தையின் தாய் இன்னும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# சூர்யா 45 திருவிழா பாடல்…. 500 நடனக் கலைஞர்களுடன் படப்பிடிப்பு!



தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் சூர்யா. தற்போது ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் தனது 45வது படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்திற்கு தற்காலிகமாக 'சூர்யா 45' என்று பெயரிடப்பட்டுள்ளது. டிரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்கிறார்.

இந்த படத்தில் சூர்யாவுடன் முக்கிய கதாபாத்திரத்தில் திரிஷா நடிக்கிறார். மேலும், சுவாசிகா, இந்திரன்ஸ், யோகி பாபு, ஷிவாதா, சுப்ரீத் ரெட்டி, அனகா மாயா ரவி மற்றும் நட்டி நட்ராஜ் ஆகியோர் நடித்து வருகின்றனர்.

ஐதராபாத்திலுள்ள ராமோஜி பிலிம் சிட்டியில் 'சூர்யா 45' படப்பிடிப்பு நடைபெற்றது. இப்படத்தில் சூர்யா 2 வேடங்களில் நடிப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ஏற்கனவே சூர்யா, வக்கீல் வேடத்தில் நடிப்பதாக கூறப்படும்நிலையில், தற்போது மற்றொரு வேடத்தில் நடிப்பதாக புதிய தகவல் வெளியாகி இருக்கிறது. நீதிமன்ற வழக்கைமையமாகவைத்து படத்தின்கதைஉருவாகப்பட்டுள்ளதாகக்கூறப்படுகிறது. சமீபத்தில் 'சூர்யா45' படத்திற்கான இசைப் பணியில் சாய் அபயங்கர் இயக்குனர் ஆர்.ஜே. பாலாஜியுடன் ஈடுபட்டு வரும் புகைப்படத்தை வெளியிட்டார்.

இந்நிலையில் ஈசிஆரில் கோயில் போன்ற பிரம்மாண்ட செட் அமைக்கப்பட்டு திருவிழா பாடல் காட்சி ஒன்று படமாக்கப்பட உள்ளதாக தற்போதைய தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பாடலில் சூர்யா, திரிஷாவுடன் இணைந்து 500க்கும் மேலான நடனக் கலைஞர்கள் நடனமாட உள்ளதாகவும், இப்பாடலுக்கு ஷோபி மாஸ்டர் நடன இயக்குனராக பணியாற்ற உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

படத்தை இயக்குவதுடன் ஆர். ஜே. பாலாஜி வில்லன் கதாபாத்திரத்தில் நடித்து வருவதாகத் தெரிகிறது. கோட் படத்தில் மட்ட எனும் பாடலில் திரிஷா நடனம் வைரலானது குறிப்பிடத்தக்கது.

# என் மீது அழுத்தம் கொடுக்க விரும்பவில்லை சிராஜ்



இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல்.ன் 18வது சீசன் நாளை தொடங்குகிறது. 10 அணிகள் கலந்து கொள்கின்றன. இந்த தொடரில் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நாளை நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதுகின்றன.

இந்த தொடரில் குஜாராத் அணிக்காக சிராஜ் விளையாட உள்ளார். இந்த நிலையில், , ஐசிசி சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் தொடரின் இந்திய அணியில் இடம் கிடைக்காதது தொடர்பாக சிராஜ் கூறியதாவது,

அணியின் தேர்வு என் கையில் இல்லை. என் கைகளில் ஒரு கிரிக்கெட் பந்து மட்டுமே இருக்கிறது, அதை வைத்து என்னால் முடிந்ததைச் செய்ய விரும்பினேன். நான் என் செயல்திறனில் கவனம் செலுத்த விரும்புவதால், தேர்வு பற்றி யோசித்து என் மீது அழுத்தம் கொடுக்க விரும்பவில்லை. நான் சில வருடங்களாக விளையாடி வருகிறேன். பொதுவாக, எங்களுக்கு அவ்வளவு ஓய்வு கிடைப்பதில்லை. ஆனால் இப்போது எனக்கு சிறிது ஓய்வு கிடைத்ததால், எனது உடற்தகுதி மற்றும் பந்துவீச்சுத் திறன்களை மேம்படுத்திக் கொண்டேன். என தெரிவித்தார் .

# ஆஸ்கர் விருது கிடைக்கும்னா நாளாவது குழந்தை பெத்துக்க ரெடி சுராஜ் வெஞ்சரமூடு




'சேதுபதி, சித்தா' படங்களை இயக்கிய பிரபல இயக்குனர் அருண்குமார் இயக்கத்தில் விக்ரம், 'வீர தீர சூரன்' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, துஷரா விஜயன், சித்திக் ஆகியோர் நடிக்கின்றனர். இந்த படத்தை எச்.ஆர்.பிக்சர்ஸ் சார்பில் ரியா ஷிபு தயாரிக்கிறார். இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைக்கிறார்.

இப்படம் இரண்டு பாகங்களாக உருவாகும்நிலையில், முதலில் இரண்டாம் பாகம் வெளியாக உள்ளது. இப்படம் வரும் 27ம் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில், இப்படத்தின் டிரெய்லர் நேற்று வெளியானது. இத்திரைப்படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டு விழா நேற்று சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.


விழாவில் விக்ரம், அருண்குமார், துஷாரா, சுராஜ், எஸ்.ஜே. சூர்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சுராஜ் வெஞ்சரமூடு பேசுகையில், "எனக்கு தமிழும், தமிழ் சினிமாவும் மிகவும் பிடிக்கும். இந்த ஆடியோ விழாவில் தான் ஜி.வி. சாரை நேரில் சந்திக்கிறேன். வாழ்த்துக்கள் சார். நானும் உங்கள் ரசிகன் தான். உங்களுடைய இசையில் வெளியான 'கோல்டன் ஸ்பேரோ…' பாடல் என்னுடைய பேவரைட். தமிழ் படத்தில் நடிப்பதற்கு வாய்ப்பளித்த இயக்குநர் அருண்குமாருக்கு நன்றி. அவர் உண்மையான தங்கமான மனிதன். அவருடைய இயக்கத்தில் வெளியான 'சித்தா' படத்தை பார்த்தேன். அவருடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று விரும்பினேன். இந்த படத்தில் பணியாற்றிய போது 'சித்தா' படத்தை விட வேற லெவலில் அவருடைய உழைப்பு இருந்ததை பார்க்க முடிந்தது. அவருக்கு நான் மிகப்பெரிய ரசிகனாகவும் மாறிவிட்டேன். நான் தற்போது கொஞ்சம் கொஞ்சம் தமிழை பேச கற்றுக் கொண்டிருக்கிறேன். இதற்கு முக்கிய காரணமே இயக்குநரும், இந்த படக் குழுவினரும் தான். இந்தப் படம் வெளியான பிறகு இயக்குநருக்கு நான் மலையாளம் சொல்லித் தருவேன்.

விக்ரம் சார் மிகப் பெரிய நடிகர் என அனைவருக்கும் தெரியும். அவருடன் நடிக்கும்போது அவர் நடித்த கதாபாத்திரங்கள் எனக்கு வரிசையாக நினைவுக்கு வந்தது. அதுபோன்ற கதாபாத்திரத்தை எல்லாம் இவர்தானே நடித்தார் என்று அவரை நான் வியந்து பார்த்துக் கொண்டே இருப்பேன். விக்ரம் சார் ஐ லவ் யூ. நானும் உங்களின் ரசிகன் தான். எஸ் ஜே சூர்யா இயக்கத்தில் வெளியான 'நியூ 'படம் பார்த்த பிறகு அவருடைய ரசிகனாக மாறிவிட்டேன். அதற்குப் பிறகு அவர் வெரைட்டியான கேரக்டரில் நடித்தார். பிறகு அவருடைய நடிப்பிற்கும் நான் ரசிகன் ஆகிவிட்டேன். ஒவ்வொரு கேரக்டருக்கும் ஒவ்வொரு ஸ்டைல் வைத்திருப்பார். அதுவும் எனக்கு பிடிக்கும். அவர் நடிப்பில் வெளியான 'இறைவி' படம் எனக்கு மிகவும் பிடிக்கும்.

எனக்கு மூணு குழந்தைகள் இருக்கிறது. முதல் குழந்தை பிறந்த போது முதல் ஸ்டேட் அவார்ட் கிடைத்தது. இரண்டாவது குழந்தை பிறந்த போது இரண்டாவது ஸ்டேட் அவார்ட் கிடைத்தது. மூன்றாவது குழந்தை பிறந்த போது ஸ்டேட் அவார்டும் நேஷ்னல் அவார்டும் ஒரே வருடத்தில் கிடைத்தது. இனிமேல் ஆஸ்கர் அவார்ட் எனக்கு கிடைக்கும்னா நாளாவது குழந்தைக்கு நான் ரெடி" எனக் கலகலப்பாக பேசினார்.

# சேப்பாக்கத்தில் ரசிகர்களுக்கு ஆட்டோகிராப் போட்டு கொடுத்த ரோகித் சர்மா




இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல்.ன் 18 வது சீசன் வருகிற நாளை தொடங்குகிறது. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, கொல்கத்தா நைட் ரைட்சர்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத், ராஜஸ்தான் ராயல்ஸ், பஞ்சாப் கிங்ஸ், டெல்லி கேப்பிடல்ஸ், குஜராத் டைட்டன்ஸ் மற்றும் லக்னோ சூப்பர்ஜெயன்ட்ஸ் ஆகிய 10 அணிகள் கலந்து கொள்கின்றன. கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன. 23ந் தேதி சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் நடைபெறும் லீக் ஆட்டத்தில் 5 முறை சாம்பியன்களான சென்னை சூப்பர் கிங்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணிகள் சந்திக்கின்றன.

இந்த போட்டிக்காக இரண்டு அணிகளும் தயாராகி வருகின்றன. இன்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர்களும், மும்பை இந்தியன்ஸ் அணி வீரர்களும் தீவிர வலைப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

தீவிர வலைப்பயிற்சிக்குப் பின், மும்பை முன்னாள் கேப்டன் ரோகித் சர்மா அங்கு கூடியிருந்த ரசிகர்களுக்கு ஆட்டோகிராப் போட்டு கொடுத்தார் . மேலும் அவர்களுடன் செல்பியும் எடுத்துக் கொண்டார்.

# சுவிஸ் ஓபன் பேட்மிண்டன்: திரிஷா காயத்ரி ஜோடி அரையிறுதிக்கு முன்னேற்றம்



சுவிட்சர்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டி பாசெல் நகரில் நடைபெற்றுவருகிறது. வரும் 23ம் தேதிவரை இத்தொடர் நடக்கிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளார்கள்.

இந்த தொடரில் மகளிர் இரட்டையர் பிரிவில் இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் திரிஷா ஜோலி காயத்ரி கோபி சந்த் இணை, ஹாங் காங்கின் யூங் புய் லாம் யூங் ந்கா டிங் இணையுடன் மோதியது.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய திரிஷா காயத்ரி ஜோடி 2118, 2114 என்ற நேர் செட் கணக்கில் யூங் புய் லாம் யூங் ந்கா டிங் இணையை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.